1981 மார்ச் 6]

Sub-way near Central Bus Stand, Madurai.

*119 Q.—THIRU E. S. VENKATESAN and THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether there is any proposal to construct a sub-way near the Central Bus Stand, Madurai, for the benefit of the pedestrians; and

(b) if so, the stage at which the matter now stands ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: அந்தப் பகுதி மிக முக்கியமான பகுதி. போக்குவரத்து அதிகமான, நெரிசல் மிகுந்த பகுதி. அமைச்சரவர்கள் நேரிலே சென்று பார்த்தால், தெரிந்துகொள்ள முடியும். எனவே அங்கே ஒரு சுரங்கப் பாதை அமைப்பது குறித்து மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அங்கே, மையப் பேருந்து நிலையத்திற்கு அருகில் பாதசாரிகளுக்குச் சுரங்கப் பாதை அமைக்க வேண்டுமென்ற செயற்குறிப்புதான் ஏற்கெனவே ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக, நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் எந்தெந்த நகரங்கள் ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு மேலே இருக்கின்றனவோ, அவை ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வரவில்லை. அதன் காரணமாக 42 லட்சம் ரூபாய் செலவில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ்: ஏற்கெனவே அந்தப் பகுதியில் சுரங்கப் பாதை அமைக்கப்படுமென்றும், கோரிப்பாளையத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்குப் பக்கத்தில் சுரங்கப் பாதை அமைக்கப்படுமென்றும் சொல்லப்பட்டது. இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லையென்று சொல்லுகிறார்கள். எனவே இது குறித்து மறு பரிசீலனை செய்து, மக்களுடைய நலனுக்காக அந்த இரண்டு இடங்களிலும் சுரங்கப் பாதை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மக்களுடைய மனோநிலையை அறிந்துதான் சில திட்டங்களைப் போடுகிறோம். ஆனால் நிதி நிலைமைகளுக்கேற்பவும் சில திட்டங்களைப் போட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இவை குறித்து பின்னாலே காலத்திற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: பொதுவாக சுரங்கப் பாதை அமைப்பதில் சிரமம் இருக்கிறது. மதுரையை ஆண்ட மன்னர்கள் சுரங்கப் பாதை அமைத்து, அவை அடைபட்டிருந்தால், அவற்றைக் கண்டுபிடித்து, தூர் எடுக்கும் யோசனை அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியே இருந்தாலும் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக இப்படிப்பட்ட சுரங்கப் பாதைகள் திருமலை நாயக்கர் மகால் போன்ற இடங்களில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படியிருந்தாலும் நம்முடைய பாதசாரிகள் செல்லத்தக்க அளவிற்குத் தகுதியான சுரங்கப் பாதையாக இருக்குமா என்பதைப் பார்த்துத்தான் செய்ய வேண்டும்.

திரு. ம. சங்கரலிங்கம்: மதுரையை ஆண்ட மன்னர்கள் ஒளிந்து ஓடுவதற்குக் கட்டிய சுரங்கப் பாதையை இப்போது கண்டுபிடிக்க, அரசு முயற்சி எடுக்குமா? அப்படிச் செய்ய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தை, உள்ளாட்சித் துறை கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபோன்ற உத்தேசமில்லை.

House-tax in Tindivanam Municipality.

* 120 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the estimated loss of revenue to Tindivanam Municipality, because of the delay to assess House-tax in time?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இக்கேள்விக்கு இடமில்லை. திண்டிவனம் நகராட்சியில் வருமான இழப்பு இல்லாமல் கட்டிடங்கள் அனைத்துக்கும் உரிய காலத்தில் வரி நிர்ணயம் செய்யப்படுகின்றது.

திரு. க. இராமமூர்த்தி: வீடு கட்டி முடித்த பிறகு, திண்டிவனம் நகராட்சியிலிருந்து 'கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட்' (completion certificate) வாங்கிச் சென்று, அதற்குப் பிறகுதான் மின்சாரத் துறையிலே மின் இணைப்பு பெற்றிருக்கிறார்கள். அப்படி மின் இணைப்பு பெற்ற பெரிய வீடுகள் பல ஆண்டுக் காலமாக வரி விதிப்புக்கு ஆளாகாமல் இருக்கின்றன. 'கம்ப்ளீஷன் சர்ட்டிபிகேட்' அடிப்படையிலே மின் இணைப்பு பெற்ற பல வீடுகள் வரி விதிப்பிற்கு ஆளாகவில்லை. அப்படிப்பட்ட வீடுகள் பற்றிய தகவல்கள்